ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

नास्माकं शिबिका नचास्ति कटकाद्यालंक्रिया सत्क्रिया
नोत्तुङ्गस्तुरगः न कश्चिदनुगः नाप्यम्बरं सुन्दरम् ।
किन्तु क्ष्मातलवर्त्यशेषविदुषां साहित्यविद्याजुषां
चेतस्तोषकरी शिरोनतिकरी विद्याऽनवद्या हि नः ॥

प्राचीनपद्यम् ।

ஓர் பண்டிதர் கூறுவதாவது எங்களுக்கு ஏறிச்செல்லப் பல்லக்கில்லை. காப்புக் கடுக்கன் மோதிரம் முதலான அலங்காரங்களும் கிடையாது. மிகவும் உயர்ந்த குதிரைகளுமில்லை பின் தொடர்ந்து கூடவரும் வேலைக்காரர்களையும் காணோம். மிகவும் அழகான உயர்ந்த வஸ்திரங்களுமில்லை உம்மிடமிருப்பது என்னவென்றால் ஸாஹித்ய வித்தையில் சிறந்தவர்களான இப்புவியிலுள்ள ஸமஸ்த வித்வான்களுக்கும் மனதிற் சந்தோஷத்தைக் கொடுக்கிறதாயும் சிரக்கம்பனம் செய்யும்படி செய்கிறதாயுமான சிரேஷ்டமான வித்யையானது எங்களுக்கிருக்கின்றது. இது ஒன்றே எனக்கு போதுமானதென்று திருப்தியாய் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இதனால் **क्षीयन्तेऽखिलभूषणानि** என்கிற சான்றோர் சாற்றுக்கிணங்க வித்தை ஒன்றைத்தவிர மற்ற சகல பூஷணங்களும் உபயோகமற்றவை என்றும் அவைகளாலேறபடும் அலங்காரம் அலங்காரமில்லை என்றும்

"वाण्येका समलङ्करोति पुरुषं या संस्कृता धार्यते"

என்றபடி உத்தம குருக்களிடமிருந்து அடையப்பட்ட சுத்தமான வாணி தான் புருஷனை அலங்கரிக்கின்றது என்றும ஏற்படுகிறபடியால் எவ்விதப் பிரயாசை எடுத்துக் கொண்டாவது உத்தமமான வித்தையைப்பெற முயற்சிக்க வேண்டியது நமது கடமையாகும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்தஸாரம்.

(212-வது பக்கத்தொடர்ச்சி)

காரண நிரூபணம்.

இவ்விதம் அக்ஞானத்தையும் அதனுடைய சக்திகளான ஆவரணம், விக்ஷேபம் என்ற இவ்விரண்டினையும் நிரூபித்து, பின்னர்க் கார்யத்தை யறிவிக்கவேண்டி முன்னர் உபாதானகாரணம், நிமித்தகாரணம் இவைகளை நிரூபணம் செய்கிறார்.

शक्तिद्वयाज्ञानोपहितं चैतन्यं स्वप्रधानतया निमित्तं स्वोपाधिप्रधानतया उपादानं च भवति ॥

ஆவரணம், விக்ஷேபம் என்கிற இரண்டு சக்திகளுடன் கூடிய அக்ஞானத்தால் உபஹிதமான சைதன்யமானது தன்னை முக்கியமாகக் கொண்டு ஜகத்திற்கு நிமித்தகாரணமாகிறது. அஃதாவது கர்த்தாவாக விருக்கும் தன்மையையடைகின்றது. ஜகத் சிருஷ்டிரூப கார்யத்திற்கு அனுகூலமான ஞானத்தையுடைய தென்பது பொருள். தனது உபாதியாகிய அக்ஞானத்தை முக்கியமாகக் கொண்டு ஜகத்திற்கு உபாதான காரணமாகின்றது. உபாதானமென்றால் தார்க்கிகர்களால் அங்கீகரிக்கப்படும் ஸமவாயிகாரணத்தை வேதாந்திகளங்கீகரிக்காதபடியால் விவர்த்தோபாதானம் என்று பொருள் கொள்ளவேண்டும். விவர்த்தோபாதானம் என்றால் தன்னைக்காட்டிலும் வேறில்லாத கார்யங்களை உண்டு பண்ணும் சக்தி பொருந்திய காரணம் என்று கருதுகிறார்கள். இதற்கிணங்கவே

निमित्तमप्युपादानं स्वयमेव भवन्प्रभुः ।
चराचरात्मकं विश्वं सृजत्यवति लुम्पति ॥ 332

ஸர்வ லோகத்திற்கும் நியந்தாவான ஸ்ரீ பரமாத்மா தாமே இந்த ஜகத்திற்கு நிமித்த காரணமாகவும், உபாதான காரணமாகவும் இருந்து கொண்டு, ஸ்தாவர ஜங்கம ரூபமான ஜகத்தின் ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமென்கிற மூன்று கர்மாக்களையும் செய்கிறார் என்று ஆசார்யாள் கருதுகின்றார்கள்.

பரமாத்மா ஒருவரே இரண்டு காரணங்களாக எப்படி ஆகிறார் என்று நிகழும் சங்கைக்கும் அவர்களே

स्वप्राधान्येन जगतो निमित्तमपि कारणम् ।
उपादानं ततोपाधिप्राधान्येन भवत्ययम् ॥ 333

ஈசுவர ஸ்வரூபத்தில் அடங்கியிருக்கும் சைதன்யத்தையும், அக்ஞானத்தையும் வேறாகப்பிரித்துக் கொண்டு ஈசுவரன் சைதன்யத்தை முக்கியமாகக் கொண்டு ஜகத்திற்கு நிமித்தகாரணமாகிறான் என்றும், தனக்கு உபாதியாயிருக்கும் அக்ஞானத்தை முக்கியமாகக் கொண்டு ஜகத்திறகு விவர்த்தோபாதானம் ஆகிறான் என்றும் கூறுகின்றார்கள்.

ஒருவரே இருவித காரணங்களாக ஆகலாம் என்பதை லௌகிக திருஷ்டாந்தத்தாலும் அறிவிக்கிறார்.

यथा लूता तन्तुकार्यं प्रति स्वप्रधानतया निमित्तं स्वशरीर-प्रधानतया उपादानं च भवति ॥

சிலந்திப் பூச்சியானது தனது வாயிலிருந்துவரும் நூலால் வலை மாதிரி சில விடங்களில் பின்னியிருப்பதைப் பலரும் பார்த்திருக்கலாம் அந்த நூலின் உற்பத்தி விஷயத்தில் அந்தச் சிலந்திதான் பிரதானமாயிருந்து கொண்டு நிமித்தமாகவும் ஆகிறது. தானே நூலாக ஆகிறதில்லை. பின்னை, கர்த்தாவாக ஆகின்றது. அதன் வாயிலுள்ள "லாலா" என்று வடமொழியில் கூறப்பட்ட ஜலமானது நூலாக ஆகின்றபடியால், லாலாரூபமான தனது சரீராவய

வத்தைப் பிரதானமாகக் கொண்டு எப்படி உபாதான காரணமா இன்றதோ அவ்விதமே பரமாத்மாவும் தாமே நிமித்தகாரணமாக வும், தமக்குபாதியான அக்ஞானத்தால் உபாதான காரணமாக வும் ஆகிறார் இக்கருத்தையே

यथा लूतानिमित्तं च स्वप्रधानतया भवेत् ।
स्वशरीरप्रधानत्वे नोपादानं तथेश्वरः ॥ 334

என்கிற இச்செய்யுளால் ஸ்ரீ சங்கரகுருசரணரும் வெளியிட்டி ருக்கிறார்கள்.

(தொடரும்)
ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஸம்ஸ்கிருத வித்யாப்பியாஸம்.

ஆஸ்திக சிகாமணிகாள்! அனைவருக்கும் ஸ்வதேசபக்தி அவச்யம் என்பது எல்லோருமறிந்தவிஷயமே. ஆனால் நான் தற்சமயம் அதன் அவசியத்தன்மையைக் குறித்து எழுதமனங் கொள்ளவில்லை. ஏனெனில் இவ்விஷயம் அனேக தினசரிப் பத் திரிக்கைகளால் அடிக்கடி போதிக்கப்பட்டு வருகிறபடியால் புதி தாய்ச் சொல்லக்கூடியதல்ல. "இப்பொழுது" "தேசபக்தி என் றால் என்ன? எந்த எந்த வஸ்துக்களில் செய்யப்படும் பக்திக்கு "தேசபக்தி" எனப்பெயர் என்பதைமட்டும் விசாரிப்போம்

(1) தன்தேசபாஷை. (2) தன்தேச ஆசாரங்கள். (3) தன் தேச மதங்கள் மற்றும் (4) தன்தேயத்தில் உண்டாகக் கூடிய வஸ்துக்களை அபிவிருத்தி செய்யும் உபாயங்களை அனுஷ்டிப்பதில் ஓர் ஆதரவு இவைகளே "தேசபக்தி" எனப்படும் என்று தேச பக்திவாய்ந்த சான்றோர் சாற்றுகின்றார். முதலாவதாகத் தன்தே சபாஷை ஒன்று விருத்தியடையுங்கால் மற்றெல்லாம் எளிதில் சீக்கிரம் விருத்தியாய்விடும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் தன் லோகவர்த்தா போதத்திற்கும் தன்மத அறிவிற்கும் தன்

ஆசார ஞானத்திற்கும் பாஷையன்றோ காரணம். அந்த பாஷை எது? என்று கேட்குங்கால் "ஸம்ஸ்கிருதபாஷை" தான் என்று உத்திரம் கூறலாம். (1) தமிழல்ல. (2) தெலுங்கல்ல. (3) மலையாள பாஷையுமல்ல. (4) கடைசியாக ஹிந்து முதலிய பாஷைகளுமல்ல தன்தேசபாஷை ஸம்ஸ்கிருத பாஷைதான் என்பதை நிரூபிப்போம். நம் தேசத்தில் வழங்கிவருகிற மற்ற ஒவ்வொரு பாஷைகளிலும் இடையிடையே அனேக ஸம்ஸ்கிருத பதங்கள் காணப்படுகின்றன. ஸம்ஸ்கிருத பாஷையிலோ மற்ற எந்த பாஷைகளிலிருந்தும் எடுக்கப்பட்ட பதங்கள் ஒன்றும் காணப்படவில்லை. மற்ற ஒவ்வொரு பாஷையும் ஒவ்வோர் தேசத்தில் பிரசாரத்தை யடைந்திருக்கிறது. தெலுங்கர் தமிழில் பேசுவதில்லை. தமிழர் ஹிந்தியில் பேசுவதில்லை. இவ்விதமல்லாமல் ஸம்ஸ்கிருத பாஷையோ எங்கும் காணப்பட்டும் எல்லாராலும் ஆதரவு பெற்றும் இருக்கிறது. தவிரவும் ஹிந்துமதக் கிரந்தங்களெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே இருக்கின்றன. இந்துக்களான நமக்கு இதைவிட ஓர் அத்தாட்சியும் வேண்டுமோ? ஆனால் இதர பாஷாசப்தங்கள் மாற்றப்பட்டு ஸம்ஸ்கிருத பாஷையில் சேர்க்கப்பட்டனவென்று சொல்வதிற்குமில்லை. ஸம்ஸ்கிருதபாஷை சப்தங்கள் திருடமான இந்திரியங்களால்தான் உச்சரிக்கத் தகுந்தவை என்பதை எவர்தான் அறியார்? ஆகையால் உச்சரிக்கத் திறமையின்மையால் கடினசப்தந்தான் மாறுபடுமேயன்றி சுலபமாக உச்சரிக்கக்கூடிய சப்தங்கள் ஒருக்காலும் மாறுபடா.எல்லா ஜனங்களும் லாகவத்தை அபேக்ஷிப்பார்களன்றோ. மேலும் பாஷைகளில் தத்வத்தைபறிந்த மேனாட்டு நிபுணர்கள் இந்த பாஷைதான் (ஸம்ஸ்கிருதம்) சகல பாஷைகளுக்கும் மூலபூதமான பாஷை என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகையால் ஸம்ஸ்கிருத பாஷைதான் ஆதியான நம் தேசபாஷை என்று ஸித்திக்கிறது. இந்த ஸம்ஸ்கிருதபாஷை ஒன்று விருத்தியடையுமளவில் மற்றவைகள் தானாகவே விருத்தியடைந்துவிடும் அதன் அபிவிருத்தியின் பொருட்டு அனேக சாதன முறைகளிருந்தபோதிலும், "ஆங்காங்கு தர்மசீலர்களான ஆஸ்திகர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்ற கலாசாலைகளுக்குத் தங்களது குழந்தைகளை அனுப்பி

வித்தலே" முதன்மையான சாதனமாகும். அனேக கலாசாலைகள் மாணுக்கர்களின்றி சிரமப்படுகின்றன. அதற்கென்று வைக்கப்பட்ட பொருளாதாரமும் வெவ்வேறு விஷயங்களில் விநியோகமடைகின்றது. கடைசியாக வேறுகதியில்லாமல்போனுல்தான் தமது மக்களை கலாசாலைகளுக்கு அனுப்புகின்றனர். இச்சிறுவர்களைச் சிஷ்யர்களாகக் கிரகித்துப் போதிக்கும் ஆசாரியர்களுக்குத்தான் என்ன—இவர்களை ஆகாரம் முதலியவையால் போஷிக்கிற தலைவர்களுக்குத்தான் எவ்வளவு உத்ஸாகம் உண்டாகக்கூடும்? பாஷைக்குத்தான் எவ்வளவு அபிவிருத்தியுண்டாகும்? பெரியோர்களே! சற்று ஆலோசியுங்கள். இவ்விதம் நம் தேச பாஷைக்கு ஏற்பட்டிருக்கும் துரவஸ்தையை யார்முன்னிலையில் சொல்லி நம்மனதை ஆற்றிக்கொள்வோம்! சாஸ்திரங்களோ கூர்மையான புத்தியுடையோரால்தான் அப்யசிக்கத்தகுந்தவை. ஓர் மேதாவியும் வாசித்து வெகுமானிக்கக் காணேம். அந்தோ! கஷ்டம்!!

ஆனுல் ஒரு சந்தேகம் உதிக்கலாம். அதாவது ஸம்ஸ்கிருத பாஷைக்கு ஆயிரக்கணக்கான குணங்கள் இருக்கட்டும் அவ்விதமிருந்தாலும் தற்காலம் ஆங்கிலத்தைப்போல் மனிதர்களுக்கு ஜீவிகையாக ஆகவில்லையே இதைப்படித்தென்னப் பிரயோஜனம் என்பதே. இந்தக் கேள்விக்கு'விடையளிப்போம். ஆங்கிலம் கற்ற அனைவரும் மாதம் ஆயிரக்கணக்காகவோ நூற்றுக்கணக்காகவோ சம்பாதிக்கவில்லை. சமமாகப் பார்க்குமளவில் 2 அல்லது 3 பேர்களே அவ்விதம் சம்பளமடைகின்றனர் மற்றவர்கள் அற்பமான சம்பளத்தையே அடைகின்றனர். இந்த ரூபாயைச் சம்பாதிப்பதற்கும் நகரவாசம் செய்யவேண்டியிருக்கிறது. நகரவாசத்திற்கும் நரகவாசத்திற்கும் மத்தியாக்ஷர மாறுதலைதவிர வேறொரு பேதமுமில்லை. சாமான்கள் மிகவும் கிராக்கியாகவே இருக்கின்றன. இவர்கள் அடைந்த சம்பளம் ஓர் ஆண் பெண் ஜீவனத்திற்கும்போதியதாகாது. சுருக்கிச் சொல்லுகையில் இவர்கள் மிகவும் கஷ்டத்தையே அனுபவிக்கிறுர்கள். வெளியேபுறப்படும் நோத்

தில் வெண்மையான சொக்காய்களணிந்தும் புதிய வஸ்திரம் தரித்தும் வருகின்றூர்கள் இதைப்பார்த்து ஜனங்கள் "இவன்தான் ராஜா, இவன்தான் சுகசாலீ" என்று எண்ணுகிறூர்கள். இவ்விதம் வெளியாடமபரங்களை மட்டும் கண்டு அவர்களுக்குத் தனது கன்னிகைகளைக் கலியாணம் செய்துகொடுத்து விடுகிறூர்கள். பின்பு துயரம் அடைகின்றனர். சிலர் ஆங்கிலத்தைக்கற்றும் ஜீவனோபாயத்தை யடையாமல் வீட்டிலேயே தங்கி விடுகிறூர்கள். வீட்டில் வசித்துக்கொண்டு மாதம்எண்முறை **(अष्टकृत्व:)** க்ஷௌரம் செய்துகொள்பவர்களாயும், நாளுக்குஐந்துதடவை

பூஜிப்பவர்களாயும் தாய் தந்தையரோடு போராடியும் ஆகார சமயத்தில் மட்டும் வீட்டையணுகுகிறவர்களாயும் **(पात्रे समिता:)** வீட்டில் நாட்டாமை செலுத்துகிறவர்களாயும்

ஆய்விடுகின்றனர். இதுதான் பெரிதானசிலரின் கைகண்ட பலன். இன்னும் சிலர் ஓர் விருத்தியுமின்றி ஓட்டல்களிலும் புகுந்துவிடுகின்றனர். இந்தப்பிரகாரம் பலவிதம் காணப்படுகின்றன. உங்களுக்கும் இதுதானுசரி என்று தோன்றுகிறது? அந்தந்த சம்பங்களில் இருக்கும் சிரமம் வர்ணிக்கத் தக்கதல்ல சிராத்ததினத்திலும் எஜமானிடத்திலிருந்து இவர்களுக்கு ஒழிவு (Leave) கிடைப்பதில்லை. இந்தக்கஷ்டம் ஸம்ஸ்கிருதம் கற்கும் மனிதர்களுக்கும் உண்டு என்றாலும் "ஒருவனுக்கு ஆயிரக்கணக்காகச் சிலவானபிறகு மற்றொருவனுக்கு இச்சிலவில்லை" என்பதால் ஸம்ஸ்கிருதம் அப்பியசிப்போனுக்கு பெரும் சௌகரியம் ஏற்படுகிறது. மேலும் ஸம்ஸ்கிருதம் கறபோர் அனேகம் போரகில் அப்பொழுது ஏதாவது கதி ஏற்படாமல்போகாது. ஏற்படத்தான் வேண்டியிருக்கும். எவ்விதம் பர்வதத்தில் பெய்த மழை ஜலம் தனத்தனி மார்க்கத்தையடைகின்றதோ அவவிதமே இவர்களும் ஒவ்வோர் மார்க்கம் கல்பித்துக்கொள்வார்கள் ஒருவராவது பசிப்பிணியால் உயிர்துறந்தார் என்று இதுகாறும் நாம் கேட்டதில்லை; கண்டதுமில்லை. எல்லாம் வல்ல சர்வேசுவரனன்றோ எல்லாரையும் பரிபாலிக்கிறூர். "ஒருக்காலும் ஸம்ஸ்கிருதம்

கற்றவன் தனமடையான்'' என்று நியமமாகச் சொல்லுவதும் அசாத்தியம். தற்காலமும் அப்பேற்பட்ட அறிஞர்களும் இருக்கிறார்கள். எவர்கள் ராமாயணம் முதலியவைகளை உபன்யசித்து மாதம்தோறும் இருநூறு முன்னூறுக் கணக்காக சம்பாதிக்கின்றார்களோ, எவர்களுக்கு வித்யையைக் கற்றும் அதிர்ஷ்டமில்லையோ எவர்களுக்கு சாமர்த்திய மில்லையோ அவர்கள் கஷ்டமடைகின்றனர். ஆகையால் தன் சாமர்த்தியா சாமர்த்தியங்களே கௌரவா கௌரவங்களுக்குக் காரணம். ஆகையால் ஸம்ஸ்கிருத பாஷைக்கு இதுவோர் அபவாதமே! ''ஸம்ஸ்கிருதம் கற்றவர் ஓர் ஓட்டைச்சோழியும் அடையார்'' என்பதை ஒப்புக்கொண்டே பேசுவோம். ஒருவன் (School Final) (ஸ்கூல்பைனல்) பரியந்தம் வாசிப்பதாக வைத்துக் கொள்வோம். 10 வருஷம் வாசிப்பதாக அங்கீகரிப்போம். அதுவரை அவனால் சுமார் 2000 ரூபாய் செலவிட வேண்டியதாகும் அந்த 10 வருஷம் வரையில் ஆங்கிலம் கற்காமல் ஸம்ஸ்கிருதமே கற்றுவந்து அந்தப்பணத்தை ஓர் உண்டியில் போட்டுவந்தால் அப்பொழுது என்ன சௌக்கியமேற்படுமென்று ஆலோசியுங்கள். பத்தாவது ஆண்டின் முடிவில் சேர்த்துப்பார்த்தால் 2000 ரூபாயாகும். இந்தப்பொருளால் சிரமமின்றி அவன் ஜீவிக்கலாம் ஸம்ஸ்கிருதம் கற்போருக்கு ஆகாரச்சிலவும் கிடையாது அச்சிலவின்மையால் ஒருமிக்கச் சேர்க்குங்கால் 3000 ரூபாயாகும். இவ்விதம் பல பிரகாரங்களால் ஸம்ஸ்கிருதக் கல்விக்கு அனேக குணங்களிருக்கின்றன. என்று நினைத்து ''ஸம்ஸ்கிருதம் கற்றல் பாழும் கிணற்றில் விழுதல்'' என்ற பிராந்தியை ஒழித்து எல்லாரும் தம் தம் குழந்தைகளை ஸம்ஸ்கிருதகலாசாலைக்கு அனுப்புங்கள். பெரியோர்களே! உங்களுக்குத் தம் மக்களால் வயது காலத்தில் பரிபாலனம் வேண்டுமேயாகிலும் மரியாதை அவசியம் என்றும் சிரார்த்தம் அவசியம் என்றும் க்ஷேமபாரம்பரை வேண்டுமென்றும் எண்ணமிருந்தால் குழந்தைகளை ஸம்ஸ்கிருதகலாசாலைக்கு அனுப்புங்கள். இவ்விதம் அனேகப்பிரகாரம் வர்ணிக்கப்பட்டபோதிலும் யார் செவியில் போகப் போகிறது? ஆங்கில ஆசாமோகத்தால் மூர்ச்சையடைந்திருக்கும் இத்தருணத்தில் இவ்வினிது வார்த்தை என்ன

செய்யும். "சமயத்தில் சொல்லவேண்டும். அன்றேல் மனம் சமாதானமடையாது" என்ற நியாயப்படி தெரிவிக்க நேர்ந்தது. "கடவுள் எப்பொழுதாவது நம்மிடத்தில் கருணை செலுத்தாமல் போவாரா?" என்று விசுவசிப்போம்.

வி. எஸ். ராமஸ்வாமி அய்யர்.

கோனேரிராஜபுரம்

இந்தியாமுன்னேற்றமாம்விழியுங்கள்

ஆரியர்களே! இப்போது நம் பரதகண்டமென்னும் இந்தியாவில் மட்டுமல்ல மற்று இப்புவியிலுள்ள கண்டங்களிலெங்குமே நாம்முன்னேறவேண்டும் என்னும் அபிப்பிராயத்தில்எல்லோரும் ஒரேதராசில் நிற்பவர்கள் தான். அவ்விதம் எண்ணத்தின் அனுகுணமாய்ச் சிற்சில தேசங்கள் சுமார் 50 60 வருடங்களுக்குள் வெகுவாய் முன்வந்து விட்டனவென்றும் பத்திரிகைகள் மூலம் யாவருமறிகிருர்கள். அவ்விதமறிந்தபின் நாமும் அவ்வண்ணமே முன்னேற வேண்டும். அவர்கள் முன்னேறியதற்கு காரணம் யாது? வியாபாரமும் கைத்தொழிலும். ஆகவே நாமும் அவ்விதம் வியாபாரத்தையும் கைத்தொழிலையும் கைப்பற்றுவோம் என்று தெரிந்துகொண்டு அவ்விதத்தொழிலிலிறங்கப் பார்க்கின்றனர். அவ்விதம் நம் இந்தியாவும் ஆவல்கொண்டிருக்கிறது. உண்மையில் நாம் இவ்விதம் ஆசைகொள்வது நியாயம் தானெபதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஏனெனில் நம் பழயகாலச் சரித்திரங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் நம் தேசம் எவ்வளவு முன்னேறியிருந்ததென்பது தெளிவாகும். கப்பல் கட்டி அன்னியநாட்டுக்கு வெகு தூரம் முதலிற் சென்றது நாம். நம்தேசத்தில் ராஜஸ்திரீ முதல் நெசவுதொழிலைத் தெரிந்துகொண்டிருந்தார்களென்று சரித்திரவாயிலாயறிலாம். படிப்பில் கேட்கவேண்டு

மோ. இயேஸுகிறிஸ்து பிறந்ததும் கீழ் தேசத்து பண்டிதர்கள் வந்தார்களென்றும் அங்கு மேற்கு தேசத்தில் இந்த ஞானிகள் ஞானோபதேசம் செய்தனரென்றும் அவர்களது வேதபுத்தகத்திலேயே இருக்கிறது. வைத்தியத்தில் மகாநிபுணர்கள். ஆயுதங்களால் அழகாய் சிகித்ஸை செய்தனர் என்று தெரிகிறது. சித்திரம் எழுதுவதில் நம்மவர் மிகக்கைத்தேர்ந்தவர்கள். எதைத்தான் சொல்லுகிறது. நம் தேசத்தவர் அறியாமல் ஒன்றைமற்றய தேசத்தவர் அறிந்தாரென்பதுமில்லை. இவ்விதம் மகோன்னததசையிலிருந்த நாம் இப்போதிருக்கும் நிலையை விசாரிப்பாம். நாம் படுக்கையை விட்டு எழுந்ததும் செய்து கொண்டு வந்த பழக்கத்தையும் ஆசாரத்தையும் துலைத்து விட்டு அன்னியநாட்டார் நமக்கு அனுக்கிரகித்திருக்கும்பற்பொடியைக் கொண்டு பல் துலக்கி அவர்கள் கொடுத்திருக்கும் ஸோப்பால் முகம் கழுவி அவர்களது தேசத்திலிருந்து கொண்டுவந்து பயிராக்கின காபிக் கொட்டையாம். தேயிலையாம் அவைகளால் கஷாயம் தயார் செய்து அவர்களால் மாட்டு இரத்தத்தால் சுத்தம்செய்யப்பட்ட சர்க்கரையைப்போட்டுச் சிறு குடி குடித்து விடுகிறோம் இது தான் இப்போது நமது கர்ப்பத்திலிருந்து நழுவிய சிறு குழவிக்கும் ஸித்தாமிருதமாய் விளங்குகிறது. இக்குடியற்றமனிதனே காணற்கரிது. பிறகு மத்தியான்ன போஜனத்திற்கு உதவக்கூடிய அரிசியை நாமே குத்திச் சாப்பிட்டது போய் மேற்றிசையாரின் இயந்திரத்தால் குத்தியதைச் சாப்பிடும்படியாய் விட்டது. இவ்விதம் குத்திய அரிசியை சாப்பிடும் நமக்கு சக்தி குன்றிவிடுகிறது இயற்கை. இதன் உண்மையை நன்கு விசாரியுங்கள். இனி நாம் வெளியிற் போகவேண்டுமானால் அவர்கள் தயார்செய்த வண்டியில் போகவேண்டும். நாம் உடுத்துவது அவர்கள் நெய்த வஸ்திரம் தான். கௌபீனம் கூட நமது சொந்த நூலால் நாம் தயாரித்ததல்ல. பால்யபருவத்திலேயே அவர்கள் செய்த அழகிய கண்ணாடியை ஸ்திரீ புருஷர்கள் ஸாதாரணமாய்ப் போட்டுக்கொண்டு பார்க்க நேர்ந்து விட்டது. இனி படுக்கை அவர்கள் தயார் செய்துகொடுத்த கட்டிலும் அவர்கள் மெத்தையும் தான்; வியாதி வந்துவிட்டால் ஆங்கில டாக்டர்

கள் தான் வரவேண்டும். அவர்கள் பெயர் தெரியாமல் தயார் செய்திருக்கும் திரவத்தைத் தான் மன மாறக்குடிக்கிறோம். ஸ்திரீகள் கருத்தரித்தால் அதுமுதல் அவர்களது மருந்தே குழந்தையைக் கருவில் வளர்க்கிறது. பிறகு பிரஸவிக்கும்போது அவர்களது ஹஸ்தஸ்பரிசம் தான் முதலில் குழந்தைக் கேற்பட்டு விடுகிறது. வெளிவந்தது முதல் காபிபோட்டுவதும் பிஸ்கோத் என்று அவர்கள் தயாரித்த பதார்த்தம்தான் ஆகாரம். இவ்விதம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாய் வளரும் குழந்தை. வித்தியாப்பியாஸாரம்பத்தில் அன்யபாஷாக்ஷரம் தான். இவ்விதம் வளர்ந்த குழந்தை எவ்விதம் ஆஸ்திக்யமுள்ளவனுவான். இவ்விதமெல்லாம் எல்லாவற்றையும் இழந்து இன்னும் அதோகதியாய் உத்ஸாகத்துடன் போய்க்கொண்டிருக்கும் போது இப்போதுதான் எந்த தைவத்தின் அனுக்கிரகமோ, நம்முன்னோர்கள் செய்த தவப்பயனோ நமக்கு க்ஷேமம் கொடுக்கத்தலைக்கிளப்புகிறது. ஐயோ நாம் யாவற்வறயுமிழந்தோம். மீண்டுமவைகளைக் கைப்பற்றவேண்டும் என்ற அவாகிளம்புகிறது ஆகவே தேசமுன்னேற்றத்திற்கு நாம் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டியது தான் நம்முடைய உரிமை. இவ்வித உரிமைக்கு பாடுபடுகிற நாம் தேசத்துரோகிகளல்ல ராஜத்துரோகிகளல்ல. நமது ஸொந்தமாயும் தொன்றுதொட்டு முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமான ஆனந்தத்தையே நாம் வேண்டுகிறோம். இவ்விதமே பகவானுடைய ஸன்னிதியில் ஓர் பக்தன்,

नाहं याचे पद मुडुपतेर्नाधिकारं मघोनः
नापि ब्राह्मीं भुवनगुरुतां का कथाऽन्यप्रसंगे ।
अन्यस्यान्यः श्रियमभिलषन्नस्ति कस्तस्य लोकः
मह्यं शम्भो दिशमसृणितं मामकानन्दमेव ॥

ஓ பரமசிவனே! நான் சந்திரனுடைய ஸ்தானத்தையாவது இந்திரனுடைய பதவியையாவது உலகிற் பெரிதான பிர்மபதத்தையாவது விரும்பவில்லை. என்றால் இனி மற்ற பதவிகளைப்பற்றிச் சொல்வானேன். பிறனது பொருளை விரும்புகிறவனுக்கு என்ன

லோகம் கிடைக்கும் ஆகவே எனக்கு அழகான எனது ஆனந்தத்தையே கொடு. அதாவது ஆத்மாநந்தத்தைக் கொடு என்றார். இதுபோல் இனி நாம் அரசாங்கத்தாரிடம் நமது உரிமையை அளிக்கவேண்டுமென்று தான் விரும்பவேண்டும். ஆகவே தேசமுன்னேற்றத்திற்கு மனிதனாய்ப் பிறந்த யாவரும் பாடுபடவேண்டியதுதான். ஆனால் எவ்விதம் பாடுபடுவது முதலில் இறங்குந்துறை எங்கு. எவ்விதம் செல்லவேண்டும். எவ்விதம் யாரைக் கேட்கவேண்டும். கேட்கும் நாம் எவ்விதமிருக்கவேண்டும். முதலில் மாற்றிக்கொள்ள வேண்டியது எது; அது இப்போது என்ன ஸ்திதியிலிருக்கிறது? இந்த ஸ்திதிக்கு வந்து எவ்வளவு காலமாயிற்று? இதனால் நேர்ந்த கெடுதி என்ன? இதை எவ்விதம் மாற்றலாம், இவைகளுக்கு முதல் நாயகனாய் யாரை அடையலாம், அவர் எவ்வித இலக்கணமுள்ளவராய் இருத்தல் வேண்டும். அவர் எதைப் பிரமாணமாய்க் கொண்டிருப்பார். நமக்கும் நம் முன்னோர்கட்கும் பிரமாணமாய் இருந்தது எது? என்று இவ்வாறெல்லாம் நன்கு ஆலோசித்தால் அப்போது தன் யோக்கியதை இம்மட்டுத்தான். நாம் இம்மட்டுத்தான் சொல்லலாம் இதற்குமேல் சொல்ல அதிகாரம் நமக்கு இல்லை. இம்மட்டிற்கு நாம் உழைப்போம். இவ்விதம் உழைத்தால் பகவான் அதற்குத் தகுந்தாற்போற் கூலியளப்பார் என்று தோன்றிவிடும். அப்போது அஹங்காரம் குறையும். அதனால் அனுதாபம் மேவிடும். அதனின்றும் கர்வம் குறையும்: வித்தையும் ஞானமும் வினயமும் உபகார சிந்தையும் ஒன்றுக்கொன்று போட்டிபோட்டு முன்னேறும். அதன் பின் இவன் லோகோபகாரியாய் ஆவான். இவைகளையெல்லாம் கவனியாது யாம் லோகச்சீர்க்கேட்டைத் திருத்தப் போகிறேனென்று கூக்குரல் மட்டிலும் போட்டுக்கொண்டு வெளிக்கிளம்பி விட்டால் பித்தனுவோம். நம்மால் ராஜத்துரோகம் ஏற்படும், நம்மைப் பின்பற்றுபவர்களும் அவஸரக்குடுக்கையாகிப் பயித்தியக்காரர்களாவார்கள் வியாதி வந்துவிட்டால் அதற்குத் தக்க ஔஷதத்தையும் அதை கொடுப்பதற்குத்தக்க அனுபவம் வாய்ந்தவனையும் உட்கொள்ளும் அளவையும் வேளையையும் பத்தியத்தையும் அனுபானத்தையும் சக்தியை

யும் பொருத்தல்லவோ கவனித்து உட்கொள்கிறான். அவ்விதம் உட்கொண்டவனல்லவா ஆரோக்யத்தைப் பெருவான். அதுபோல் தற்காலம் கீழ்தசையிலிருக்கும் நாம் இவ்விஷயத்தைப் பற்றிப் பரிதபித்துத் திரிபவன் எல்லோரும் மகான் என்றுஎண்ணி அவனைப்பின் தொடர்ந்தால் பலன் கை கூடிவிடுமோ ஒருபோதும் கூடா. வந்திருக்கும் கஷ்டமோ அளவிடத்தக்கதல்ல. முயற்சியும் இனி நிமிஷமும் தாமதியாது எடுத்துத்தான் ஆகவேண்டும். ஆகவே இவ்விஷயத்தில் என் சிற்றறிவுக் கெட்டியதை உங்கள் முன்னிலையில் தெரிவிக்கிறேன். இது யுத்தமென்ருகுமானால் எல்லோருமதைப் பின்பற்ற முயற்சிப்போம். இல்லாவிடில் இன்ன அம்சம் ஒவ்வாதது அல்லது முழுமையும்பெற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்பதை நியாயமாய் வெளியிட வேண்டுகிறேன். ஆனால் முழுமையும் பிசகுகானென்று சொல்லஅநேகர் முன்வருவார்கள். அவ்விதம் காரணமின்றிச் சொல்லிக்கொண்டிருந்தால் அவர்கள் கோஷ்டிவேறு மற்றவர்கள் கோஷ்டிவேறு என்று இருகக்ஷிதான் தடித்தோங்கும். இவ்விதம் பிரிந்தால் நமது இஷ்டம் கை கூடுமா ஸமூகச்சண்டைதான் வளருமாவென்று அவர்களே ஊகித்தறிய வேண்டும். இனி அடுத்து என்போன்றவர்களின் அபிப்பிராயத்தைவெளியிடுகிறேன்.

(தொடரும்)

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.

மார்க்கஸஹாயர்.

(224-வது பக்கத்துடர்ச்சி)

மேலும் லிங்கத்தின் முன்னால் ஒரு குண்டத்தில் அக்னியை ஸ்தாபித்து அதைசிவரூபமாகத் தியானித்து வந்தான். ஆனாலும் பகவான் பிரஸன்னராகவில்லை. பிறகு கூர்மையான வாள்எடுத்துத் தனது மாம்ஸத்தை அறுத்து நெய்யில் நனைத்து ஸ்ருக்கு என்

னும் பாத்திரத்தில வைத்து, மந்திரங்களைத் தியானித்துக் கொண்டு **शिवाय वौषट्** என்று ஸாஹஸமாகவே அக்கினியில் ஹோமஞ்செய்தான். இவ்விதம் பத்துத்தடவை செய்தும் பகவான் பிரஸன்னமாகாமலிருக்கவே, தனது சரீரத்தைப் பூர்ணமாகவே அக்கினியில் ஹோமஞ்செய்து விடுவோமென்று தீர்மானித்து மந்திரத்தைஜபிக்கலானுன். உடனே கருணாநிதியான சிவபெருமானும் அவனது கடோர பக்திக்கீடுபட்டு லிங்கத்திலிருந்து ஆவிர்ப்பவித்தார்.

सर्पान्नद्धजटाजूटः स्फुरच्चन्द्रार्धशेखरः ।
गंगासुघटितोष्णीषः फणिकुण्डलमण्डितः ।
शेषहारोल्लसद्वक्षाः श्लक्ष्णभस्यानुलेपनः ।
शार्दूलत्वक्परीधानः कार्कोटमणिहंसकः ॥
त्रिशूलभृत्पुरस्तस्य सावित्रस्य तदा भवत् ॥

ஸர்ப்பங்களால் சடைமுடியை முடிந்துக் கொண்டும், சந்திரனை சிரோபூஷணமாயணிந்து கொண்டும், கங்காதரனுயும், ஸர்பமயமான குண்டலங்களால் அலங்கரித்துக் கொண்டும், ஆதிசேஷனுகிற ஹாரத்தை மார்பில் அணிந்துகொண்டும், மழமழப்பான பஸ்மாவைப் பூசிக்கொண்டும் நாகஸூத்திரந்தரித்துக்கொண்டும் சூலதாரியாய்ப் பரமேச்வரன், அவனுக்கு முன்னுல் ஆவிர்ப்பவிக்கவே, ஸாவித்திரன் புளகாங்கிதனுய் ஸாஷ்டாங்கமாய் வணங்கி நிற்கவே, யாவரும் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். தேவவாத்தியங்கள் முழங்கின. தேவதாஸிகளாடினுர்கள். பகவான் அவனை யாலிங்கனஞ்செய்து கைலாஸத்திற்கு அழைத்தார். அப்போது அந்த ஸாவித்திரன் பகவத்கிருபையால் ப்ராகிருத சரீரத்தைவிட்டு, அப்ராகிருதமான திவ்வியமங்கள விக்ரஹமடைந்து, தேவர்கள், கந்தர்வர்கள் இவர்களால் சூழப்பட்டு, மஹாமுனிவர்களால் புகழப்பட்டு, ஜ்யோதிர்மயமான மார்க்கத்தால் கைலாஸஞ்சேர்ந்தான். அவ்வி

டத்தில் பகவான், நந்தி, ப்ருங்கி இவர்களுக்கு அடுத்த கணாதிபதியாய் அவரை ஸ்தாபித்தார். இவ்வாறு ஸாவித்திரனுக்கு ஆமுஷ்மிக மார்க்கஸஹாயராய் நின்ற எம்பெருமானை எக்காலமும் தியானித்து நாமும், பேரானந்தம்பெற முயல்வோமாக.

மேலும்,

मर्त्यबुद्धिर्गुरौ यस्य शिवलिंगे शिलामतिः ।
शब्दबुद्धिस्तु वेदेषु पापिष्ठानां हि जायते ॥

ஸத்குருவினிடம், மநுஷ்யன் என்றும், சிவலிங்கத்தில், சிலையென்றும், வேதங்களில் சப்தம் என்றும் எண்ணம் பாபிஷ்டர்களுக்குண்டாகின்றது.

புண்ணியசாலிக்கே குருவினிடம் ஈச்வரன் என்ற எண்ணமும், லிங்கத்தில் பரமேச்வரபாவனையும், வேதங்களில் பிராமாண்யபுத்தியும் ஏற்படும்.

அவ்விதமான ஆஸ்திக்யபுத்தியை நமக்கு அளிப்பதற்கே ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதிகளான நமது ஆச்சார்யஸ்வாமிகள் ஆங்காங்கு விஜயஞ்செய்து மார்க்கஸஹாயராயிருந்து விளங்கி வருவதை யறியாதவர் ஒருவருமில்லை. ஆகையால் சரூபமாக மார்க்கஸஹாயராகப் பிரகாசிக்கும் ஆச்சார்யாளின் உபதேசத்தில் செவிசாய்த்து அங்ஙனமே நடந்து கொள்வோமாக.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரீ.

தானம்.

தானம்—அல்லது—தர்மம் செய்வதில் உத்தமோத்தமமானது "அன்னதான" மென்பது யாவரும் அறிந்ததே.

ஒருவனுக்கு கைநிறைய பொருளிருந்த போதிலும், அவன் மனமானது, "போதும்" என்று நிம்மதியை யடைவதில்லை. அன்னத்தைப் போட்டாலோ! வயிறு நிறைந்ததும். "போதும்"

"போதும்" என பன்முறை உண்மையான மனத்திருப்தியுடன் கூறுவான். அப்பால் வலுக்கட்டாயமாக போட்டாலும் ஒரு கவளமும் உடசெல்லாது.

"தானம்" செய்வதிலும் "நிதானம்" வேண்டும், "நிதான" த்திலும் "ஸமாதானம்" வேண்டும், இல்லையேல் அவன் செய்யும் தான—தர்ம—த்திஞல் அதன் பலனையடையமாட்டான்

பாத்திரமறிந்து பிச்சையிடுஎன்று நம்மூதாட்டியாம்ஒளவையும்கூறியுள்ளார். அதாவது—பிச்சை—தானம்—தர்மம்—வாங்குபவர்களின் யோக்கியதையை—நடத்தையை—யறிந்து அவரவர்களுக்குத் தகுந்தாப்போல் கொடுக்கவேணு மென்பதே. இதைத் தழுவிய சிறு கதையொன்று பெரியோர்களால் சொல்லக் கேட்ட ஞாபகம் வருபதால் அதைக் கூறுவாம்.

முன்னம் ஒரு காலத்தில் ஓரூரில் உத்ம வேதியர் ஒருவர் தமது தர்ம பத்தினியுடன் இனிதே இல்லறம் நடாத்திவந்தார்.

அவ்வேதியர் ஸ்வபாவமாகவேஸகலப்பிராணிகளிடத்திலும், மிகுந்த கருணையுள்ளவர். ஏழைகள் இரந்தால் இல்லையென்ஞமல் கொடுக்கும் வள்ளல் ஒருவர் பசித்திருக்க உண்ணமன மற்றவர். பரமதயாளகுணசீலர். அவர் முற்பிறவிகளிற் செய்ததவப் பயஞல் அஷ்டைச்வர்யத்தையும் அடைந்தவர் பொருமையாதி துர்க்குணங்களுக்கு அவரைக்கண்டால் பயம. வேதவேதாந்த பாரங்கதர். அவரை ஸகலகலாவல்லவரெனச் சொல்வதுமிகையாம்

(தொடரும்)

மாந்தை சா. கிருஷ்ணன்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர ஞமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.